களஞ்சியம் KALANJIYAM - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal
eISSN 2456-5148
Vol. 4 Issue: 03 August 2025

# தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறி
## Tamil Illakiyathil Bakthi Neri

**முனைவர் வ.கலைஅரசி,**
உதவிப் பேராசிரியர், பதிப்புத் துறை, திராவிடப் பல்கலைக்கழகம்,
குப்பம், ஆந்திரா-517426

**Dr. V.kalaiyarasi,**
Assistant professor, Publications, Dravidian University, kuppam-517426, AP.
Email- vkarrasidu@gmail.com.

**Abstract**

The Tamil language, praised by Bharathi as "The language that measures the sky is the language that measures the tongue," is one of the ancient languages that man first spoke. Taninayagam Adigal has highlighted that the language of commerce is English, the language of messengers is French, and the language of devotion is Tamil. Many books on devotion have been written in such a special Tamil language. The right path for every human being to realize the purpose of his life and achieve that purpose is the path of God. It is said that if a human being has the help of God, he can rule the world. Similarly, if there is no effort to worship God, God will not be with us. God has shown love to human beings and performed miracles, but man is obliged to thank the Lord. The great ones refer to that love as devotion. The principle of devotion is the principle of devotion. That principle of devotion is the highest and basic principle of human life. In that sense, this article aims to explain how the principle of devotion has been praised in Tamil literature.

**Keywords:** Devotion, faith, God, religion, human life.

**ஆய்வுச்சுருக்கம்**:

"வானம் அளந்ததனைத்தும் அளந்திடும் வன்மொழி" என்று பாரதியால் போற்றப்பட்ட தமிழ்மொழி மனிதன் முதன்முதலில் பேசிய பழம்பெருமொழிகளில் ஒன்றாகும். வணிகத்தின் மொழி ஆங்கிலம், தூதின் மொழி பிரெஞ்சு, பக்தியின் மொழி தமிழ் என்று தனிநாயகம் அடிகள் சிறப்பித்துக் கூறியுள்ளார். அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் பக்தியை பற்றிப் பல நூல்களில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு மனிதன் தமது வாழ்வின் நோக்கத்தினை உணர்ந்து அந்த நோக்கத்தை அடைய சரியான பாதை இறைவழியாடே. மனிதனுக்கு இறைவன் துணை இருந்தால் உலகையும் ஆள முடியும் என்பது ஆன்றோர் வாக்கு. அதேபோல் இறை வழிபாடும் முயற்சி இல்லையேல் இறைவனும் நம்மோடு இருக்க மாட்டான். இறைவன் மனித உயிரிடத்தே அன்பு காட்டி அற்புதங்கள் புரிந்தருளினராயிருனும் அம்மனிதன் பெருமானுக்கு நன்றி செலுத்தக் கடமைபட்டவன். அந்த அன்பினையே பக்தி என்று பெரியவர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த அன்பு வழிபட்ட நெறியே பக்தி நெறி. அந்த பக்தி நெறியே மனித வாழ்வின் உயர்நிலை அடிப்படை நெறி. அந்த வகையில் தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறி எவ்வாறு போற்றப்பட்டுள்ளது என்பதை விளக்குவனவாக இக்கட்டுரை உள்ளது.

**கலைச்சொற்கள்:**

பக்தி, நம்பிக்கை, கடவுள், மதம், மனித வாழ்க்கை

**முன்னுரை**

மனிதனை மனிதனாக மாற்றுதும், உள்ளத்தையும், மனத்தையும் பண்படுத்துவது இறை வழிபாடு, இறை உணர்வு, பக்தி வழிபாடு, நம்பிக்கை என இறைத் தன்மைக்குள் அடங்கும். இறைமை என்பதற்கு தெய்வத் தன்மை என அகராதியில் விளக்கம் காணலாம். திருமறை மக்களை நல்வழிப்படுத்துவதற்கும், அவர்களை பாவச் செயல்களை ஈடுபாடாமல் தடுப்பதற்கும், பாவங்களில் இருந்து நீங்குப் புனிதப்படுத்துவதற்கும் தான் இறை மகனார் இயேசுபிரான் அவதரித்தார் என்று கூறுகிறோம். அந்த

வகையில் தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறி எவ்வாறு போற்றப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரையில் காணாலாம்.

**தொல்காப்பியத்தில் பக்தி நெறி;**

தமிழின் மிகப் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம், தொல்காப்பியர் அக்கால மக்களின் பழக்கவழக்கங்களையும், பேச்சு வழக்கையும் புலவர்களின் செய்யுள் வழக்கையும் ஆராய்ந்து நூலை எழுதியுள்ளார். தமிழிலக்கியம் ஏறக்குறைய 25 நூற்றாண்டுகளுக்கு மேலான பழமையான வரலாறு உடையது. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் அகத்திணை இயலில் ஒவ்வொரு நிலத்திற்கும் கூறப்பட்டுள்ள கருப்பொருள்களுள் அவ்வந் நிலத்திற்குரிய தெய்வம் குறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறிஞ்சி நிலத்திற்கு முருகனும், முல்லைக்கு திருமாலும், மருத நிலத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலை நிலத்திற்கு கொற்றவையும் தெய்வங்களாகக் குறிக்கப் பெற்றுள்ளனர். இதன் மூலம் சங்க காலத்தில் மக்களிடையே தெய்வ வழிபாடு மிகுந்திருந்ததை அறிய முடிகிறது.

**சங்க இலக்கியத்தில் பக்தி நெறி;**

சங்க காலத்தில் சைவம் தமிழ்நாட்டில் தலை சிறந்த சமயமாக இருந்தது. அதனையடுத்து வைணவம் சிறப்புற்று இருந்தது. பௌத்தமும், சமணமும் அந்த அளவிற்கு விரிவு அடையவில்லை. ஆனால் சங்க கால இறுதியில் பௌத்தமும், சமணமும் தொடக்கம் பெற்றன. சங்க காலத்தில் சிவன் பிறவா யாக்கைப் பெரியோன் ஆக முதலிடத்தில் வைத்துப் பேசப்படுகிறார். பரிபாடல் காலம் கி.மு முதல் நூற்றாண்டு முதல் கி.பி முதல் நூற்றாண்டு வரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கு பரிமேலழகரே முதன் முதல் உரை எழுதி உள்ளார். இந்நூலுக்கு இப்பெயர் ஏன் வந்தது எனில் பிரிந்து செல்லும் ஓசை உடையது. பல வடிவம் பெற்று வருவது. பாவகைகளுக்கு இடம் கொடுப்பது. அகமும் புறமும் பற்றிய நூலாக பரிபாடல் உள்ளது. இந்நூலில் 70 பாடல்கள் உள்ளன. இதில் திருமால், முருகன் வைகை ஆற்றைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

“வலன் உயர் எழிலியும் மாகவிசும்பும்
நிலனும் நீடிய இமயமும் நீ
அமுக்கண் ஏர் வானத்து அணி நிலத் திகழ்தரும்
திங்களும் தெறு கதிதக் கனலியும் நீ”

பாடல் 44 – 45

பாடலில் இயற்கையோடு ஒன்றிணைந்த இறைவனை ஒப்பிட்டுக் கூறுவது இயல்பு.

நற்றிணையில் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடல்,

“மாநிலந் சேவடியாகத் தூநீர்
வுளைநரல் பௌவம் உடுக்கையாக
பசுங்கதிர் மதிமொடு சுடர்கண் ஆக
இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீது அற விளங்கிய திகிரியோனே”

நற்றிணை பாடல் -1

இப்பாடலில் சிவனுக்குரிய அடையாளங்களான நெற்றிக்கண், உடுக்கை போன்றவை எடுத்துரைக்கப்படுகின்றன.

இது போன்றே ஐங்குநூற்றிலும் பெருந்தேவனாரல் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடலில்,

“நீல மேனிவாலிழை பாத்து
ஒருவன் இருதான் நிழற்கீழ்
மூவகையுலகு முகிழ்த்தன முறையே” ஐங் - பாடல் - 1

உமாதேவியாரை ஒருபாகமாவுடையவன், மூவகை உலகத் தோற்றத்திற்கு காரணமானவன் என்று சிவபெருமானைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

திருமால் அவதாரக் கதைகள் பல சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. பிரகலாதன் திருமாலைப் புகழ அவன் தந்தை அவனைப் பலவாறு துன்புறுத்தியபோது தந்தையை உகிரால் பிளந்தார். திருமால் உலகத்தை மூன்றடியால் அளந்தார் இந்த செய்தியை,

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தூஅய தெல்லாம் ஒருங்கு" -கலித்தொகை

கலித்தொகை பாடல் எடுத்தியம்புகிறது.

சிவன், திருமால் மட்டுமன்றி முருகப் பெருமானின் திருவுருவம் பற்றிய செய்தி குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில் கூறப்பட்டுள்ளது. சிவந்த திருவடி பவழும் போன்ற மேனி, நீண்ட வேலும், சேவற்கொடியும், அசுரனை இரண்டாகப் பிளந்த வலிமையுடைய வேலாயுதம் பெற்றவனாகவும் உலக உயிர்களைக் காப்பவனாகவும் முருகன் பேசப்படுகின்றான்.

திருமுருகாற்றுப்படை நூல் முழுமையும் இறைவனைப் பற்றியதாகவே உள்ளது. முருகப் பெருமானின் இறைத்தன்மை, ஆறுமுகம், பன்னிருகைகள், ஐந்தொழில் சிறப்புகள், வேன்மகள் ஆடும் விழா, வெறியாட்டு போல்வன தனித்தனியே சிறப்புடன் பேசப்படுகின்றன. வீடு பேற்றினை அளிப்பவன் முருகன் என்று குறிப்பிடப்படுள்ளது.

வெற்றித் தெய்வமாக அக்காலத்தில் கொற்றவை வணங்கப்பட்டாள். வெற்றியாகிய தாயை வணங்குவதைக் கொற்றவை நிலை என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியத்தில் கொற்றவை பற்றி செய்திகள் அரிதாகவே காணப்படுகின்றன.

"பெருங்காட்டக் கொற்றிக்குப் பேய்
நொடித்தூங்கு"
-கலித்தொகை

எனக் கலித்தொகையிலும்,

"நெற்றி விழியா நிறைந்திலகம் இட்டானே
கொற்றவை கோலங்கொண்டு ஓர் பெண்"
-பரிபாடல்

என்ற பரிபாடல் கொற்றவை பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"புணியியரத்தை நின்குடையே முனிவா
முக்கட் செல்வர் நகர் வலஞ்செற்கே"
-புறம் - பா – 6

ஏனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக்கிழார் பாடிய பாடல் கடைச் சங்ககாலத்திற் பாண்டியநாட்டில் சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைந்திருந்த செய்தியை விவரிக்கிறது.

**நீதி இலக்கியத்தில் பக்தி நெறி:**

மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்தத் தோன்றிய நூல்களே நீதி நூல்கள். அவற்றுள் முதலிடம் பெறுவது திருக்குறள்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலைகுறள்.
-குறள் 9

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

-குறள் 10

போன்ற குறள்களில் சிவன், திருமால் என்று சிறப்புப்படுத்திக் கூறாமல் இறைவன் என்று பொதுத்தன்மையிலும், எண் குணத்தான் என அவனது சிறப்பு இயல்புகளும் விவரிக்கப்படுகின்றன. மனித வாழ்க்கை சிறக்க, அறக் கருத்துக்களை வலியுறுத்தி சமண, பௌத்த அறிஞர்கள் நீதி நூல்களைப் பாடியுள்ளனர்.

**காப்பியங்களில் பக்தி நிலை:**

இளங்கோவடிகள் சமணராக இருந்தாலும் பல்வேறு கோயில்களைப் பற்றியும், பல்வேறு தெய்வங்களைப் பற்றியும் அந்தந்த தெய்வங்களுக்கு உரிய வழிபாட்டு நெறிகளையும் கூறியுள்ளார். ஆனால் மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் பௌத்த சமயக் கருத்துகளை மணிமேகலையில் மிகுதியாகக் கூறியுள்ளார். மணிமேகலையில்,

"நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக

-மணி – 1:55

என்று சிவ வழிபாட்டு நெறிகயைக் குறிப்பிடுகின்றார்.

கடவுளுக்கு பலியிட்டு வழிபடும் வழக்கமும், மலர் தூவி வழிபடும் வழக்கமும் இருந்ததை சங்க இலக்கியங்களில் காணுகின்றோம். சிவனை முதலிலும், திருமால், முருகன், கொற்றவை முதலான தெய்வங்களையும் வழிபடு தெய்வங்களாகப் போற்றியுள்ளனர் என்பதை சிலப்பதிகாரம் நமக்கு பின்வரும் பாடல் மூலம் தெரிவிக்கின்றது.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்"

-சிலம்பு- 5-169-172

ஆய்ச்சியர் குரவையில் திருமால் வழிபாட்டு நெறியை அறிய முடிகிறோம்.

இளங்கோவடிகள் சமணராக இருந்தாலும், பல்வேறு கோயில்களைப் பற்றியும், பல்வேறு தெய்வங்களைப் பற்றியும் அந்தந்த தெய்வங்களுக்கு உரிய வழிபாட்டு நெறிகளையும் கூறியுள்ளார். ஆனால் மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் பௌத்த சமயக் கருத்துக்களையே மிகுதியாகக் கூறியுள்ளார் அதுமட்டுமன்றி இரட்டைக் காப்பியங்களின் வாயிலாக புகார், வஞ்சி, காஞ்சி, மதுரை போன்ற பெரிய நகரங்களின் உள்ள புத்த விகாரங்களையும், சமணப் பள்ளிகளும் இருந்ததை அறிகிறோம்.

**முடிவுரை;**

இதுகாலும் கூறியதன் மூலம் தொல்காப்பியர் காலத்திருந்தே இறை வழிபாடு இருந்தது என்பதும், மனிதனை நல்வழிப்படுத்துவதற்கு இறைவன் மீது அவன் கொண்டிருந்த நம்பிக்கையே காரணம் என்பதையும் அறிகிறோம். சைவ, வைணவக் கோயில்களில் உருவச் சிலைகள் வைத்து வழிபடும் வழக்கமும், விழாக்காலங்களில் ஆடல், பாடல் இருந்ததையும் சமணமும், பௌத்தமும் கொல்லாமை நெறியை வலியுறுத்தி துறவறத்தைப் போற்றியதையும் அறிகிறோம்.

**பார்வை நூல்கள்:**


1. சங்க காலக் கடவுள் - இளங்கோவன்
2. பக்தி இலக்கியம் - அருணாச்சலம்
3. இலக்கியத்தில் இறை பக்தி – டாக்டர்.மாநிலன் (கி.ஜெகதீஸ்வரன்)
4. இலக்கிய வரலாறு – பூவண்ணன்

***References:***

1. Sangam Age Deity / God of the Sangam Period - Ilangovan
2. Bhakti Literature / Devotional Literature - Arunachalam
3. Divine Devotion in Literature / Devotion to God in Literature - Dr. Maanilan (K. Jagadeeswaran)
4. Literary History – Poovannan

License : Copyright (c) 2025 Author : This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.